**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**PRC. No.02/2017**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | **தனபால்** ( LW. 1 ) |
| Father's / Husband Name | : | த/பெ.ராமு |
| Village | : | சூரம்பட்டி |
| Taluk | : | ஈரோடு |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை. )**

**முதல் விசாரணை:-**

1) நான் சம்பவ சமயத்தில் ஈரோடு மாவட்டம், சூரம்பட்டியில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வந்தேன். தற்போது பழைய இரயில் நிலையம் அருகில் உள்ள கல்லுக்கடை மேட்டில் குடியிருந்து ஆக்டிங் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் ஈரோடு – கரூர் ரோட்டில் உள்ள கார்ஸ்டேண்டில் வழக்கமாக காரை நிறுத்திவைத்து வாடகைக்கு சென்று வருவேன். கடந்த 04.06.2009–ம் தேதி கார்ஸ்டேண்டில் இருந்தபோது இரவு சுமார் 07.00 மணியளவில் அடையாளம் தெரிந்த, பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட மோகன் என்பவரும், அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத ஒருவரும் வந்து என்னிடம் நாமக்கல் வரை செல்ல கார்வேண்டும் என்று கேட்டனர். நான் வாடகை ரூ.1500/– என்று கூறி ரூ.500/– அட்வான்ஸ் பெற்றுக்கொண்டேன். பின்னர் அவர்களுடன் நான் காரில் புறப்பட்டு இரவு 09.00 மணியளவில் நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வந்தோம். அங்கு ஒரு கடையில் ஐயர் இருக்கிறாரா என்று கேட்டார்கள், அதற்கு கடைக்காரர் ஐயர் சேந்தமங்கலம் சென்றுவிட்டார் என்று சொன்னார். உடனே என்னுடன் வந்தவர்கள் சேந்தமங்கலம் செல்லலாம் என்று சொன்னார்கள். சேந்தமங்கலம் செல்லும் வழியில் பி.ஜி.பி ஐஜடி அருகே செல்லும் போது ஈரோடு ஸ்பீடு ஆம்புலன்ஸ் டிரைவர் சுரேஷ் எனக்கு போன் செய்து வாடகைக்கு வருகிறாயா என்று கேட்டார், நான் நாமக்கல்லில் இருக்கிறேன் என்னால் வரமுடியாது என்று சொன்னேன். அப்போது காரில் என்னுடன் வந்த மோகன் என்பவர்

போனில் யாருடன் பேசுகிறீர்கள் என்று கேட்டு என்னிடம் இருந்து போனை வாங்கி என்னடா மாப்பிள்ளை, எப்படி இருக்குற என்று பழக்கப்பட்டவர்போல் பேசினார். அதன் பின்னர் சேந்தமங்கலம் சென்று புதன் சந்தை ரோட்டில் கொஞ்சம் தூரம் போய் விட்டு சரியான விலாசம் தெரியல, நாமக்கல் செல்லலாம் என்று சொன்னார்கள். நாமக்கல் போகும் வழியில் பி.ஜி.பி ஐஜடிக்கு அருகில் இருவரும் இறங்கி ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்னர் புறப்பட்டு நாமக்கல் வந்து, நேதாஜி சிலை அருகில் வண்டியை நிறுத்தி மீதமுள்ள வாடகை ரூ.1000/- பெற்றுக்கொண்டு ஈரோடு செல்ல வண்டியை எடுத்த போது எதிரிகள் இருவரும் வேலக்கவுண்டம்பட்டி அருகே, பெருக்காம்பாளையத்தில் உள்ள நண்பர் வீட்டில் இறங்கி கொள்வதாக கூறி என்னுடன் காரில் மீண்டும் ஏறிக்கொண்டார்கள்.

2) இரவு சுமார் 12.00 – 12.15 மணியளவில் வேலக்கவுண்டம்பட்டி, பெருக்காம்பாளையம், அருந்ததியர் தெரு, விநாயகர் கோவில் அருகே வண்டியை நிறுத்த சொன்னார்கள், வண்டியை நிறுத்தி இறங்குங்கள் என்று சொல்லும் போது காரின் பின்னால் அமர்ந்திருந்த மோகனுடன் வந்த மற்றொரு நபர் என்னை தலையின் இடது பக்கம் சுத்தியால் அடித்ததில் எனக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. காரின் முன்னால் அமர்ந்திருந்த மோகன் காரில் இருந்து இறங்கி வந்து என்னை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு காரை ஓட்டி சென்றுவிட்டனர். நான் சத்தம் போட்டேன். அருகில் இருந்தவர்கள் அங்கு ஓடி வந்தார்கள். நான் உடனே எனது முதலாளிக்கு போன் செய்தேன். எனது முதலாளி அங்கு வந்தவுடன் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

3) 29.07.2009-ம் தேதி வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து எனது முதலாளிக்கு போன் செய்தார்கள். என்னிடம் இருந்து கடத்தி செல்லப்பட்ட கார் ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், புரடத்தூர் அருகே நிற்பதாகவும், எதிரியும் அங்கு இருப்பதாகவும் எனது முதலாளிக்கு வேலக்கவுண்டம்பட்டி காவல் ஆய்வாளர் தகவல் தெரிவித்து, வண்டி மற்றும் எதிரிகளை அடையாளம் காண்பிப்பதற்காக என்னையும், எனது முதலாளியையும் அழைத்துக்கொண்டு ஆந்திர மாநிலம் சென்றார்கள். 31.07.2009 ம் தேதியன்று புரடத்தூர், வன இலாகா அலுவலகம் சென்று காரை பார்த்து, அதிகாரிகளிடம் விசாரித்து விட்டு திரும்ப புரடத்தூர் பேருந்துநிலையம் அருகே உள்ள ராயல் ரெசிடன்சி அருகே வந்த போது மாலை 05.00 மணியளவில் ரெசிடன்சி முன்னால் நின்றுகொண்டிருந்த மோகனை நான் அடையாளம் காண்பித்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் மோகனை கைது செய்து விசாரிக்கும் போது

என்னை தாக்கிவிட்டு, காரை திருடிச்சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் இவ்வழக்கு சொத்தான கார் மற்றும் இரும்பு சுத்தியானது கைப்பற்றப்பட்டது. வழக்கு சம்மந்தப்பட்ட எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் கூறமுடியும். போலீசார் என்னை விசாரணை செய்தனர். (இவ்வழக்கு சொத்தான காரை காரின் உரிமையளார் உரிய மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டார். கார் குறித்த புகைப்படமானது வழக்கு கோப்பில் இல்லாததால் குறியீடு செய்யப்படவில்லை. )

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**PRC.02/2017**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | T.R. செந்தில் ( LW.6 ) |
| Father's / Husband Name | : | த/பெ.பா.ரத்தினவேல் |
| Village | : | ஈரோடு |
| Taluk | : | ஈரோடு |
| Calling | : | -- |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை. )**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்போது ஈரோடு, திருநகர் காலணியில் குடியிருந்து வருகிறேன். நான் வாடகை கார் வைத்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக TN 39 AB 0283 என்ற டொயாட்டோ குவாலிஸ் கார் உள்ளது, அந்த வண்டியை எனது டிரைவர் தனபால் மூன்று வருடமாக வாடகைக்கு ஓட்டி வந்தார். கடந்த 04.06.2009 ம் தேதி இரவு 12.30 மணிக்கு எனது டிரைவர் தனபால் எனக்கு போன் செய்து நான் வாடகைக்கு நாமக்கல் வரை வந்தேன். திரும்ப வேலக்கவுண்டம்பட்டி, பெருக்காம்பாளையம், அருந்ததியர் காலணி, விநாயகர் கோவில் அருகில் வரும்போது வண்டியை நிறுத்தி வாடிக்கையாளரை இறக்கிவிடும்போது தன்னை காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்த நபர் தலையின் இடது நெற்றி பொட்டில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தி, வண்டியில் இருந்து கீழே தள்ளிவிட்டுவிட்டு முன்சீட்டில் அமர்திருந்த மோகன் காரை ஓட்டிச்சென்றுவிட்டார் என தெரிவித்தார்.

2) உடனே நான் ஈரோட்டில் இருந்து கிளம்பி பெருக்காம்பாளையம் சென்று எனது டிரைவரை பார்த்து அவரை அழைத்துக்கொண்டு வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்பு எனது டிரைவர் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டார். பின்னர் 29.07.2009 ம் தேதி வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்தார்கள். கடத்தி

செல்லப்பட்ட எனது கார் ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், புரடத்தூர் அருகில் இருப்பதாகவும், எதிரியும் அங்கு இருப்பதாகவும் எனக்கு வேலக்கவுண்டம்பட்டி காவல் ஆய்வாளர் தகவல் தெரிவித்து, வண்டி மற்றும் எதிரிகளை அடையாளம் காண்பிப்பதற்காக என்னையும், எனது டிரைவரையும் அழைத்துக்கொண்டு ஆந்திர மாநிலம் சென்றார்கள். 31.07.2009 ம் தேதியன்று புரடத்தூர், வன இலாகா அலுவலகம் சென்று காரை பார்த்து, அதிகாரிகளிடம் விசாரித்து விட்டு திரும்ப புரடத்தூர் பேருந்துநிலையம் அருகே உள்ள ராயல் ரெசிடன்சி அருகே வந்த போது மாலை 05.00 மணியளவில் ரெசிடன்சி முன்னால் நின்றுகொண்டிருந்த மோகனை எனது டிரைவர் தனபால் அடையாளம் காண்பித்தார். காவல் ஆய்வாளர் அவர்கள் மோகனை கைது செய்து விசாரிக்கும் போது எனது டிரைவரை தாக்கிவிட்டு, காரை திருடிச்சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வேலக்கவுண்டம்பட்டியில் உள்ள டிரைவர் அசோகன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியானது அ.சா.ஆ.2 ஆகும்.**

3) பின்னர் அன்றைய தினம் மாலை சுமார் 06.30 மணியளவில் வன இலாகா அலுவலகம் சென்று வண்டியின் அசல் ஆவணங்களை சமர்பித்து TN 39 AB 0283 என்ற டொயாட்டோ குவாலிஸ் வண்டியை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். ஆய்வாளர் கைப்பற்றிய மகஜரில் நானும், வேலக்கவுண்டம்பட்டியில் உள்ள டிரைவர் அசோகன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **TN 39 AB 0283 என்ற டொயாட்டோ குவாலிஸ் கார் குறித்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆகும்.** பின்னர் ஆந்திரா மாநிலத்தில் இருந்து வேலக்கவுண்டம்பட்டி வரும் போது எதிரி மோகன் புத்தூர் பிரிவுரோட்டில் உள்ள பாலம் அருகில் உள்ள புதர் மறைவில் இருந்து எனது டிரைவரை தாக்கிய சுத்தியை எதிரி எடுத்து காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். ஆய்வாளர் கைப்பற்றிய மகஜரில் நானும், வேலக்கவுண்டம்பட்டியில் உள்ள டிரைவர் அசோகன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **இரும்பு சுத்தியல் குறித்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆகும்**. இவ்வழக்கு சொத்தான காரை நான் இந்நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். கார் குறித்த புகைப்படமானது வழக்கு கோப்பில் இல்லாததால் குறியீடு செய்யப்படவில்லை. (அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4–ல் கண்ட வழக்கு சொத்தான கார் மற்றும் இரும்பு சுத்தியலானது இவ்வழக்கு தொடர்புடைய குற்ற எண் சம்மந்தப்பட்ட SC.No.48/2018 ல் அ.சா.பொ. 1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.